DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S. No.61/2022

Plaintiff side witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.சுகுமார் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.09.2025.**

முதல்விசாரணை:–

நான் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும், அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் நான் அறிந்தவகையில் உண்மையானவை. எங்கள் வங்கிக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் தூத்துக்குடி மாவட்ட மேலாளர் 06.12.2012 ல் அனுப்பியுள்ள கடிதம் அசல் வா.சா.ஆ–1 எங்கள் வங்கிக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் தூத்துக்குடி மாவட்ட மேலாளர் 24.01.2013 ல் அனுப்பியுள்ள கடிதம் அசல் வா.சா.ஆ–2, பிரதிவாதி, வங்கியில் கடன் வழங்ககோரி சமர்ப்பித்த விண்ணப்பித்தம் 26.04.2013 தேதியிட்டது அசல் வா.சா.ஆ–3, பிரதிவாதி, 10.01.2014 ல் வங்கிக்கு எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட் வா.சா.ஆ–4, பிரதிவாதி, 10.01.2014 ல் வங்கிக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழிக்கடிதம் வா.சா.ஆ–5, பிரதிவாதி, 10.01.2014 ல் வங்கிக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி ஆவணம் வா.சா.ஆ–6, பிரதிவாதி, 10.01.2014 ல் வங்கிக்கு எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் வா.சா.ஆ–7, 30.09.2014 தேதியன்று பிரதிவாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் நிலுவை ஒப்புதல் சான்று வா.சா.ஆ.8, 19.08.2015 தேதியிட்ட தூத்துக்குடி தாட்கோ மாவட்ட மேலாளர், பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் வாதி வங்கிக்கு அனுப்பபப்பட்டது வா.சா.ஆ–9, 26.09.2016 தேதியிட்டு வங்கி, வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ–10, 27.10.2016 ல் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ–11, 22.12.2016 தேதியிட்ட வங்கி தனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய ரிஜாண்யின்டர் அறிவிப்பு வா.சா.ஆ–12, இணைப்பு அறிவிப்பை பிரதிவாதி வழக்கறிஞர்

பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ–13, 26.12.2016 தேதியிட்ட பிரதிவாதி மேற்படி இணைப்பு அறிவிப்புகளை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (2 எண்ணம்) வா.சா.ஆ–14 வரிசை, 29.12.2016 தேதியிட்ட பிரதிவாதி தனது கடன் நிலுவை தொகையை ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த கடிதம் வா.சா.ஆ–15, 29.03.2019 தேதியிட்டு பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் உயிர்ப்பிப்பு கடிதம் வா.சா.ஆ–16, 12.03.2022 அன்று வாதி வங்கி, தனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதியின் 2 விலாசங்களுக்கும் அனுப்பிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ–17, 16.03.2022 ல் பிரதிவாதி மேலப்பாறைப்பட்டி விலாசத்தில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ–18, 17.03.2022 தேதியிட்ட பிரதிவாதியின் தனது சுப்பிரமணியபுரம் முகவரியில் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சல் உறை வா.சா.ஆ–19, 28.02.2022 தேதியிட்ட பிரதிவாதி கடன் கணக்கு பட்டியல் வா.சா.ஆ–20, 28.01.2019 தேதியிட்ட வாதி வங்கியின் பெயர் மாற்றம் குறித்த அரசாணை நகல் வா.சா.ஆ–21 பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும்.

குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.